12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியது</u>

# <u>கடவுள் ஒருவரா?</u>
# <u>கோடிக்கணக்கானோர்</u>
# <u>இருக்கிறார்களா?</u>



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் சமாது கொண்டருளுபவர்)

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 **ஆனி** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **“கடவுள் ஒருவரா? கோடிக்கணக்கானோர் இருக்கிறார்களா?” -** 1992இல் நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றச் சிந்தனைக் கூட்டத்தில் வழங்கப் பட்ட இந்துவேத விளக்கத்தின் கையெழுத்துப் பிறதியின் நகல்.
2. **“இந்துமதம் (சித்தர் நெறி) Indhuism (The Siddharism)” -** 1985இல் குருதேவர் அருளிய கட்டுரை வடிவிலான அறிவிக்கையின் நகல்.
3. **“நீத்தார் சடங்கு நிறைவுத் திருவிழா (பதினெண்சித்தர் நெறிமுறை)”** - குருதேவர் எழுதி ‘நீத்தார் சடங்கு நிறைவுத் திருவிழா (பதினெண்சித்தர் நெறிமுறை)’ என்ற தலைப்பில் 1988இல் அச்சிட்டு வழங்கிய அறிவிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட நால்வகை வாக்குகள்.

---

“.....நண்ப! இந்துமதம்தான் இந்தியப் பண்பாட்டின் கூறுபாடுகளைப் பாதுகாத்து வருகின்ற ஒன்று. {It is the Induism (= The Siddharism) which alone is safe-guarding the cultural heritages of India or Indian Civilisation}. ‘இந்தியா’ என்றோர் நாடு உருவாக்கப்பட்ட போது, ஏறத்தாழ ஓரிரு சிற்றரசுகளைத் தவிர, எல்லா மாநிலங்களும், எல்லா இன மக்களும்... அதை அப்படியே ஏற்றுக் கொண்டன. அதற்குக் காரணம் இமயம் முதல் குமரி வரை ‘இந்துமதத்தால்’ ஒற்றுமைப் படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப் பட்டிருந்ததுதான். இப்பேருண்மையினை அரசியல்வாதிகள் உணரவில்லை. நாத்திகவாதிகள் நம்பவில்லை, பகுத்தறிவுவாதிகள் புரிந்து கொள்ளவில்லை.....”

**குருதேவர் அவர்களின் அஞ்சல் திரட்டிலிருந்து எடுக்கப் பட்ட சில வரிகள்.**

**ஒலிப்பேழை - 4**

# கடவுள் ஒருவரா? கோடிக்கணக்காேனர் இருக்கிறார்களா?

நமது ஞானுச்சாரியாரால் உருவாக்கப் பட்ட சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், பண்டாரங்கள், பண்டார சந்நதிகள், ஆச்சாரியார்கள், ஏமகோடி பீடங்கள், காமகோடி பீடங்கள், சோமகோடி பீடங்கள், வாமகோடி பீடங்கள் மற்றும் அரியவாள், பெரியவாள், கூரியவாள், சீரியவாள் என்று சொல்லக் கூடிய அருளாளர்கள் நாடெங்கிலும் பட்டிதொட்டிகளிலும், தெருக்களிலும் சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்பதற்காகக் கூட்டப்பட்டது இந்த கருத்துப் பரிமாற்ற சிந்தனைக் கூட்டம்.

40 ஆண்டுகளாக குவலய குருபீடமான ஞானுச்சாரியார் இந்த மண்ணுலகிற்குச் சொந்தமான எல்லாவகையான பயிரினங்கள், உயிரினங்களுக்கும், எல்லா வகையான மொழியினருக்கும், எல்லாவகையான இனத்தவர்க்கும் பொது வேதமாக வழங்கப் பட்ட இந்து வேதத்தின் தலைவராக, நாயகமாக, பீடமாக இருக்கக் கூடிய ஞானுச்சாரியார் எவ்வளவுதான் செயல்பட்டாலும், மதத்தில் இருக்கக் கூடிய கலக்கங்கள், குழப்பங்கள், போர்கள், போராட்டங்கள், வீம்புகள், சண்டை சச்சரவுகள் போன்றவைகளை அடக்க முடியவில்லை. ஆகவேதான், இந்துவேத விளக்கக் கூட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளது. இப்படி நாடெங்கிலும் துவக்கப் பட்ட போதிலும், இரண்டு ஆண்டுகள் ஆகியும் மக்களிடையே நல்ல செல்வாக்கு

அடையவில்லை என்ற காரணத்தால் இந்தக் கருத்துப் பரிமாற்ற சிந்தனைக் கூட்டம் நடத்தப் படுகிறது.

பொதுமேடையில் பேசக்கூடிய குருகுலத்தில், கருகுலத்தில், திருகுலத்தில், தருகுலத்தில் பயிலக் கூடிய மாணுக்கர்கள், மாணுக்கியர்கள் எப்படிப் பேச வேண்டும் என்பதை விளக்கவும், ஞானுச்சாரியார் போதகராகவும், சாதகராகவும் இருந்து 40 ஆண்டுகளாக மாணுக்கர்கள், மாணுக்கியர்களை அருளை அநுபவப் பூர்வமாக வழங்கவல்ல ஆற்றல் உள்ளவர்களாகத் தயாரித்தும் கூட நாட்டில் யாரையும் திருத்த முடியவில்லை, திருத்த முடியவில்லை, திருத்த முடியவில்லை.

ஆகவே, இப்பொழுது திருத்த வேண்டிய கட்டாயம் அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இந்து வேதத்தின் விளக்கம் இந்துக்களுக்கு விளக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நன்ருக நினைவில் கொள்ள வேண்டும். இது **இந்துமத விளக்கமல்ல**. **இந்துவேத விளக்கம்**. இதில் ஒவ்வொருவரும் சொல்லக் கூடியது என்னவென்ருல்:-

<u>இந்துவேதமானது; இதுவரை தோன்றிய வேதமாக இருந்தாலும் சரி, வாழ்ந்து கொண்டிருக்கின்ற வேதமாக இருந்தாலும் சரி, தோன்றக் கூடிய வேதமாக இருந்தாலும் சரி, இந்த இந்துவேதம்தான் தாய்வேதமாக இருக்கிறது, மூலவேதமாக இருக்கிறது, கருவாக இருக்கிறது, அடிப்படை வேதமாக இருக்கிறது</u> என்ற பேருண்மைகளை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்து வேதத்தின் மூலமாகத்தான் மற்ற மதங்கள் பிறந்தன, பிறப்பிக்கப் படுகின்றன, நாளையும் பிறக்கும். எனவே, இதுதான் அடிப்படைக் கருத்துக்களாக இருக்கின்றன, சான்றுகளும் இருக்கின்றன, ஊன்றுகளும் நிரம்ப இருக்கின்றன.

இந்த இந்துவேதம் என்ற ஆலமரத்தின் இலைகளாக, கிளைகளாக, விழுதுகளாகத்தான் மற்ற மதங்கள் தோன்றின, தோன்றின, தோன்றின என்பதனை இந்துவேதம் விளக்குகிறது.

எனவே, இந்து மதத்திற்கும், இந்து வேதத்திற்கும் எந்த மதத்தின் மீதும் வெறுப்போ, பகையோ, எதிர்ப்போ, மறுப்போ இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

மற்ற எல்லா மதங்களும் அந்தந்த நாட்டில் உள்ள பழைய மதங்களை சீர்திருத்தக் கூடியவர்களின் பெயரால் ஏற்படுகின்றவைதான். தோன்றிய, தோன்றக் கூடிய மதம் எதுவாக இருந்தாலும், சீர்திருத்தம் செய்பவர்களின் பெயரால் ஏற்படுபவைகள்தான். இந்த அடிப்படையில் பார்த்தால் இவைகள் யாவும் இந்து மதத்திலிருந்து பிறந்தவைகள் என தெளிவாகிறது.

இந்து வேதம் ஒன்றுதான் கடவுள்களைப் பற்றி முழுமையாகக் கூறுகிறது. இந்துவேதம் ஒன்றுதான் கடவுள்களால் எழுதப் படுகின்ற ஒன்று. மற்ற மதங்களில் கடவுளைப் பற்றி கூறப்படவில்லை. கடவுள்கள் எப்படி இருந்தனர் என்று கூறப்படவில்லை.

எனவே, இந்துவேதத்திற்கும், இந்துமதத்திற்கும் விளக்கம் தருவதற்காகவும், உலகில் ஏற்படக் கூடிய சண்டை சச்சரவுகளைப் போக்குவதற்கும் கடவுள்கள் நேரில் வந்து இந்துவேதத்தின் விளக்கங்களைக் கூறுகின்றனர்.

**இந்து வேதம் என்பது ஒரு மகா கடல் போன்றது**. அந்தக் கடல் தண்ணீரை பாத்திகளில் பாய்ச்சி உப்பு விளைவிப்பார்கள். இப்படி உப்பு விளைவிப்பதால் கடல் தண்ணீர் குறைந்து விடாது. அதுபோல்தான், மகா கடல் போன்ற இந்துவேதத்தில் உப்பு போன்றதுதான் இந்துமதம். எனவே, இந்து வேதத்தில் கோடியில் ஒரு பங்கு கூட கிடையாது இந்த இந்துமதம்.

இந்து வேதம் என்பதில் 108 பூசைநூல்கள், 48 வகைப் பூசைவிதிகள், 96 தத்துவ நூல்கள், 144 செயல்சித்தாந்த நூல்கள் இருக்கின்றன. இவையல்லாமல் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள் மற்றும் நான் சுருதிகள், நான் ஆரணங்கள், நான் மீமாம்சைகள், நான் ஆகமங்கள், நவநாதங்கள், பதினெண்சித்தங்கள், 36 ஓதங்கள், 96 போதங்கள் இருக்கின்றன. இவையல்லாமல் நியமங்கள், நிட்டைகள், நிடதங்கள், நீதிகள் என்ற நூல்கள் இருக்கின்றன. இவைகளே யெல்லாம் முழுமையாக தெரிந்து கொள்வது என்பது கடினம்.

எனவே இந்துவேதம் என்பது மிகப் பெரிய கடல் போன்றது. இதில் கோடியில் ஒரு பங்காகத்தான் இந்துமதம் இருக்கிறது. கடல் தண்ணீரில் சிறிது தண்ணீர் எடுத்து உப்பு காய்ச்சுவது போலத்தான் இந்து வேதத்திலிருந்து இந்துமதம் உண்டாக்கப் பட்டுள்ளது. இந்து வேதம் இந்துமதத்தின் பிரதிபலிப்பு அல்ல. இந்து வேதம் சொல்லக் கூடிய கோடியில் ஒரு பங்குதான் இந்து மதம்.

காலப்போக்கில் ஒரு இலட்சம் ஆண்டுகள், இரண்டு இலட்சம் ஆண்டுகள் சென்றபின் மக்களின் வளர்ச்சி, மக்களின் கண்டுபிடிப்பு, காலத்தின் தேவை இவைகளுக்கு ஏற்ப மக்களுக்கு பழைய மதத்தினே தெரிய வைக்க வேண்டிய அவசியம் வரும். அப்பொழுது பீடாதிபதிகள், அருளாளர்கள் தோன்றுவார்கள். அப்பொழுது கடவுள்களைக் கூப்பிடுவார்கள்.

எத்தனையோ சிவன்கள் இருப்பார்கள், எத்தனையோ ஈசுவரர்கள், ஈசுவரிகள், சர்வேசுவரர்கள், சர்வேசுவரிகள், பரமேசுவரர்கள், பரமேசுவரிகள், ஆதி ஈசுவரர்கள், ஆதி ஈசுவரிகள், மகேசுவரர்கள், மகேசுவரிகள், அனுதி ஈசுவரர்கள், அனுதி ஈசுவரிகள், மால்கள், திருமால்கள், பெருமால்கள், மாயோன்கள், பிறமண்கள்,

நெடியோன்கள், இந்திரன்கள், இதுபோல் சத்திகள் ஏராளமாக இருக்கின்றனர். இவர்களில் யாரையாவது கூப்பிட்டு இன்று இந்துவேதம் நலிவுற்று போயிற்று; ஆகவே இன்று இருக்கக் கூடிய இந்து வேதத்தைப் பரப்பத் தேவையான கருத்துக்களைக் கூறும்படிக் கேட்பார்கள்.

அருளாளர்கள் 100, 200 ஆண்டுகள் வாழ்கிறார்கள் என்றால் அதற்குள் இந்து வேதத்தை முழுமையாகப் படிக்க முடியாது, பயில முடியாது. இந்து வேதம் என்பது அண்டபேரண்டங்கள் அனைத்தையும் விளக்கக் கூடிய பெரிய நூல்கள். கடவுள்கள் அடிக்கடி இந்து வேதத்தை படிக்கக் கூடியவர்கள்; கடவுள்கள் இந்து வேதத்தின்படி வாழக் கூடியவர்கள்.

கடவுள்களைப் பற்றி மெய்யாக சொல்லக் கூடியதுதான் இந்து வேதம். கடவுள்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் இந்து வேதத்தில் இருந்துதான் தெரிந்து கொள்ள முடியும். ஏனெனில், இந்து வேதத்தை எழுதுபவர்கள் கடவுள்கள். புதிது புதிதாகக் கண்டுபிடித்து எழுதக் கூடியவர்கள் கடவுள்கள்.

அவர்கள் பீடாதிபதியோடு நான்கு ஐந்து ஆண்டுகள் உலகம் முழுவதும் சுற்றி மனிதர்களோடு வாழ்ந்து; இந்த உலகத்தின் உண்மைகளைத் தெரிந்து கொண்டும், எந்தெந்த மதங்கள் எப்படித் தோன்றியிருக்கின்றன என்றெல்லாம் பார்த்து ஆராய்ந்து, எந்தெந்த மதங்கள் என்னென்ன கருத்துக்கள் சொல்கின்றன? மதங்களுக்கிடையே என்னென்ன கருத்து வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள் இருக்கின்றன? இவைகளை எவ்வாறு போக்குவது? இந்துவேதத்தை எப்படிப் பரப்புவது? இந்து வேதம்தான் எல்லா மதங்களுக்கும் மூலம் என்பதை எல்லா மதங்களுக்கும், நிறுவனங்களுக்கும் எடுத்துக் கூறி; மக்களின் தவறுகள் என்ன? குறைகள் என்ன? தேக்கங்கள் என்ன? முடக்கங்கள் என்ன? நலிவுகள், மெலிவுகள், அடக்கங்கள்,

ஒடுக்கங்கள், தளர்ச்சி, அறியாமை, மடமைகள், மூடப் பழக்க வழக்கங்கள், கலக்கங்கள், குழப்பங்கள், வம்பு தும்புகள் என்ன? போட்டி பொருமை, ஒரு மதம் மற்ற மதத்தை எப்படி ஆக்கிரமிப்பு செய்கிறது? மதங்களில் பிளவு எப்படி ஏற்படுகிறது? ஒரு நாட்டு மதம் அடுத்த நாட்டிற்கு ஏன் போகிறது? மத மாற்றத்திற்குக் காரணம் என்ன? இவைகளைக் கண்டுபிடித்து உலக மக்களுக்கு கடவுள்கள் விளக்கம் தருகிறார்கள்.

இந்து வேதம் இமயம் முதல் குமரி வரை இருப்பது அல்ல, அல்ல, அல்ல, அல்லவே அல்ல. உலகம் தோன்றி 500 கோடி ஆண்டுகள் ஆகின்றன. அதில் இந்து வேதம் தோன்றி 43,73,092 ஆண்டுகள் (கி.பி.1991இல்) ஆகின்றன. இவ்வளவு பழமையான வேதம்தான் இந்துவேதம். இது இந்த மண்ணுலகில் தோன்றிய காலம்தான் 43,73,092. ஆனால், விண்வெளியில் இருக்கக் கூடிய அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்களில் கோடானு கோடி ஆண்டுகளுக்கு முன் உள்ள வேதம்தான் இந்துவேதம்.

<u>இந்துவேதத்தை உண்டாக்கியவர்கள்தான் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும். இவர்களின் சார்பாக மண்ணுலகிற்கு கொண்டு வந்தவர் ஆதிசிவனார்</u>. அவரே தெளிவாகச் சொல்கிறார் **அண்டபேரண்டமாளும் இந்து வேதம்** என்று.

இவைகளை ஏடுகளாகத் தரப்பட வில்லை. இந்த மண்ணுலக மக்களுக்கு என்ன தேவை? எத்தனை வித நாடுகள் இருக்கின்றன? ஒவ்வொரு நாட்டிலும் என்னென்ன தட்பவெப்ப நிலைகள் இருக்கின்றன? அங்குள்ள பயிரினங்கள், உயிரினங்கள், அங்கு இருக்கின்ற மக்களுக்கு என்ன தேவை? வாழ்க்கை எப்படி அமைந்துள்ளது என்பதை பிரிக்கின்றார்கள். இவர்களின் இனங்களைப் பிரிக்கின்றார்கள். இந்த இனங்களின் மொழிகள் பிரிக்கப் படுகின்றன என இந்து வேதம் குறிக்கிறது. பல வகையான மொழிகள்

இருக்கின்றன, நூற்றுக் கணக்கில் மொழிகள் இருந்தே தீரும்; என்றைக்கும் பலவகையான நாடுகள் இருந்தே தீரும்; பல வகையான இனங்கள் இருந்தே தீரும் என்று இந்து வேதம் கூறுகிறது.

ஆகவே இந்துவேதம் எல்லா மொழிகளும் விடுதலை பெற்று வாழ வேண்டும்; அதேபோல எல்லா இன மக்களும் விடுதலை பெற்று வாழ வேண்டும்; அதேபோல எல்லா நாடுகளும் விடுதலை பெற்று வாழ வேண்டும் என்று கூறுகிறது.

இப்படிக் கூறக் கூடிய ஒரே வேதம் இந்து வேதம்தான். வேறெந்த மதமும் இப்படிக் கூற வில்லை. ஆகவே உலகில் தோன்றக் கூடிய எல்லா மொழிகளுக்கும், எல்லா இனங்களுக்கும், எல்லா நாடுகளுக்கும் உரிய வேதம் இந்து வேதம். இது பொது வேதமாகும். எல்லாப் பயிரினங்களையும் பயன்படுத்தி உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. அந்த உயிரினங்களுக்குத் தலைவனாக மனிதன் வாழ்கிறான். மனிதன் நல்வாழ்க்கை எப்படி வாழ வேண்டும் என்பதனைக் கூறுகிறது இந்து வேதம். உறவு முறை, உரிமை முறை, பழக்க வழக்கங்கள், உணவு முறைகள், நம்பிக்கைகள், குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, தனிமனித வாழ்வு, அரசியல் வாழ்வு என்பனவற்றை வகுத்துத் தருவதுதான் இந்து வேதம்.

<u>இந்து வேதம் உலக வேதம், உலக முதல் வேதம், உலக மூல வேதம், உலகில் உள்ள எல்லா மக்களுக்கும் தரப்பட்ட வேதம்</u>. மற்ற வேதம் எல்லாம் குறிப்பிட்ட நாட்டில் உள்ளவர்களுக்கு, குறிப்பிட்ட மொழியில் எழுதப் பட்டிருக்கின்றன; குறிப்பிட்ட மக்களுக்கு மட்டும் எழுதப் பட்டுள்ளன. ஆனால், இந்துவேதத்தின் மூலம்தான் எல்லா நாட்டினரும், எல்லா இனத்தவரும், எல்லா மொழி பேசுபவர்களும் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளைப்

பெறலாம். அதற்குரிய பூசை மொழிகள், பூசை விதிகள், தத்துவங்கள், செயல் சித்தாந்தங்கள் இந்து வேதத்தில் வழங்கப் பட்டுள்ளது.

இந்து வேதம் சொல்கிறது: ஒலிதான் மதம். இந்த ஒலிதான் ஆக்கல், அழித்தல், அருளல், இரங்கல் என்பனவற்றைச் செய்யக் கூடிய வேத ஒலிகள், வேத மந்திர ஒலிகள், பூசைமொழி ஒலிகள், பூசைவிதி ஒலிகள், தத்துவத்தின் ஒலிகள், செயல்சித்தாந்தத்தின் ஒலிகள், நான்மறை ஒலிகள், நான்முறை ஒலிகள், நானெறி ஒலிகள், நான்வேத ஒலிகள், சுருதி ஒலிகள், ஆகம ஒலிகள், ஆரண ஒலிகள், மீமாம்சை ஒலிகள், நேம நியம நிடத நிட்டை ஒலிகள், இந்த பதினெண்சித்தங்கள், நவநாதங்கள், முப்பத்தாறு ஓதங்கள், தொண்ணூற்ருறு போதங்கள் என்று சொல்லக் கூடியவைகளுக்கு ஒலி நயம்தான் முக்கியமானவை. இந்த ஒலி நயங்கள் எல்லாம் தமிழ் எழுத்துக்களின் அடிப்படையில்தான் இருக்கின்றன. ஆக தமிழ் எழுத்துக்கள்தான் உலகம் முழுவதும் கடவுள்களை உண்டாக்க முடியும். மனிதர்களைக் கடவுள்களாக்க முடியும், மனிதர்கள் கடவுள்களை சந்திக்க வைக்க முடியும். கடவுள்கள் உண்டாகிக் கொண்டே இருப்பார்கள். கடவுள்களை எந்த நாட்டில் வேண்டுமென்ருலும் உண்டாக்கலாம், உண்டாகலாம்.

ஒரு நாட்டில்தான் கடவுள்கள் இருக்கிருர்கள், அங்கு வந்து கும்பிடுங்கள் என்று இந்து வேதம் கூறவில்லை. அங்கு வந்து கும்பிட்டால்தான் அருள் வழங்க முடியும் என்று கூறவில்லை. ஆக ஒரு நாட்டில்தான் கடவுள் இருப்பார், தோன்றுவார் என்று கூறுவது தவறு, தவறு, தவறு. பயனற்றது, உண்மையில்லாதது.

கடவுள்கள் என்பவர்கள் எப்படி பயிரினங்கள், உயிரினங்கள் தோன்றுகின்றதோ அதுபோல் உலகம் முழுவதும் தோன்றுவார்கள், இருப்பார்கள் என்று கூறுகிறது இந்து வேதம். கடவுள்களோடு தொடர்பு கொள்ள உதவுவது தமிழ்மொழியின் ஒலி அலைகள்தான்.

அதனால்தான் **பதினெண்சித்தர்கள் தாய்மொழியான தமிழ்மொழியை, அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி என்று கூறுகிறார்கள்**. ஆக உலகத்தவர்கள் இந்த மொழியினைக் கற்றுக் கொண்டு, எழுத்து வடிவத்தைக் கற்றுக் கொண்டு, தமிழ்மொழியிலேயே பேசக் கற்றுக் கொண்டு பயிற்சி பெறுவார்களே ஆனால், மனிதர்கள் கடவுள் ஆகி விடுவார்கள் என்று இந்து வேதம் கூறுகிறது.

மற்ற எந்த மதத்தினரிடமும் கேட்டால் மனிதன் கடவுள் ஆக முடியாது, கடவுளைப் பார்க்க முடியாது, கும்பிட்டுக் கொண்டே இரு, எப்பவாவது உன்னைக் கவனிப்பார் என்றுதான் கூற முடியுமே தவிர வேறொன்றும் சொல்ல மாட்டார்கள்.

கடவுள்களைப் பார்க்கலாம், பேசலாம், கடவுள்களை கூப்பிடலாம், கடவுளாகவே மாறலாம் என்று கூறுகிறது இந்து வேதம். மேலும், கடவுள்கள் தோன்றுவார்கள், தோன்றிக் கொண்டே இருப்பார்கள், பிறப்பார்கள், இறப்பார்கள், பிறவா நிலையும் அடைவார்கள் என்று கூறுகிறது இந்து வேதம்.

கடவுளாலே எழுதப் பட்ட வேதம், எழுதப் படுகின்ற வேதம், எழுதப் படும் வேதம் இந்து வேதம். திருஞானசம்பந்தர் தன்னுடைய வாழ்நாளில் கடவுளை சோதியாகக் காட்டி 16,000 பேர்களை கடவுளோடு ஐக்கியமாக்கி நேராக சொர்க்கத்திற்கு போகச் செய்தவர்தான் திருஞானசம்பந்தர் எனும் தமிழன். மேலும், இவர் செத்துப் போன பெண்ணினை எரித்து சாம்பலாக்கிய பின்பும் கூட அந்தப் பெண்ணின் எலும்பை வைத்து அந்தப் பெண்ணை எழுப்பிக் கொடுத்திருக்கிறார் என்றால் இந்துவேதத்தின் இந்துமதத்தின் சிறப்புக்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மற்ற மதத்தில் செத்தவர்களை எழுப்பலாம் என்றுதான் இருக்கிறது. செத்துப் போன எரித்த சாம்பலை அல்லது எலும்பை வைத்து எழுப்பலாம் என்று கூறப்பட வில்லை. இந்து வேதத்தில் உள்ள கருத்துப் படி இந்து மதத்தின் அடியான், நாயன்மார்கள், நாயனார்கள் செத்தவர்களை மட்டும் எழுப்பவில்லை; எரித்த சாம்பலிலிருந்து எலும்பை எடுத்து உயிர் கொடுத்திருக்கிறார்கள் என்றால் இந்து வேதத்தின், இந்து மதத்தின் சிறப்பு என்ன என்பது புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறே சுந்தரமூர்த்தி நாயனார் அவிநாசிலிங்கத்தில் உள்ள கோவில் குளத்தில் 10 ஆண்டுகளுக்கு முன் குளித்த 7 வயது பையனை முதலை விழுங்கி விட்டது. 10 ஆண்டுகளுக்குப் பின் இவனோடு படித்த பக்கத்து வீட்டுப் பையனுக்கு திருமணம் செய்யப்படுகின்ற நேரத்தில் தன் மகன் இருந்தால் திருமணம் முடித்திருக்கலாமே என்று அழுது புலம்பி குளக்கரையில் இருக்கும்பொழுது இதைப் பார்த்துக் கேள்வியுற்ற சுந்தரமூர்த்தி நாயனார் ஊரைக் கூட்டி பாட்டுப்பாடி முதலையை வரவழைத்து முதலை வாயிலிருந்து வளர்ச்சி பெற்ற 17 வயது பையனாக வெளியே வரச் செய்தார். இந்த அற்புதத்தைச் செய்தவர்தான் சுந்தரமூர்த்தி நாயனார், தமிழன். இதற்கு வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்தது இந்து வேதம்.

உலகம் முழுவதும் இருந்த இந்த இந்து வேதம் கேட்பாரற்று, கவனிப்பாரற்று இமயம் முதல் குமரி வரை சுருங்கிப் பின்பு அதுவும் சுருங்கி தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கின்றது; தமிழ்மொழியில்தான் இருக்கிறது; தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. இந்துவேதத்திற்குரிய எல்லாக் கடவுள்களும், அருளாளர்களும் தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள்.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமிழர்கள்தான். இந்து வேதம் தமிழ்மொழியில்தான் இருக்கிறது. உலக வேதம்தான் இந்து வேதம் என்பதினை உலக மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதற்குத்தான் இந்து வேத விளக்கக் கூட்டங்கள் நடத்தப் படுகின்றன.

மக்களிடையே நாத்திகர்கள், ஆத்திகர்கள் இருக்கிறார்கள். பிறமண்ணினரான பிராமணர்கள் ஒரே கடவுள்தான் இருக்கிறார் என்று கூறி அவர்களது மதம்தான் சிறந்தது என்று கூறுகிறார்கள். இதற்கு நம்மவர்கள் அவர்களுடைய புகழ் பாடி அவர்களுக்குக் காவலர்களாக இருக்கிறார்கள். ஆகவே நம்மவர்கள் இதனை அறிந்து புரிந்து மக்களுக்குக் கோடிக் கணக்கான கடவுள்கள் இருப்பதை உணர்த்தி, **தமிழ்மொழியில்தான் இந்து வேதம் இருக்கிறது** என்பதை உலக மக்களிடையே பரப்பியாக வேண்டும். ஆனால், மற்ற மதத்தைப் புண்படுத்தவோ, எதிர்க்கவோ இதைச் சொல்லவில்லை, சொல்லவில்லை, சொல்லவில்லை.

கி.மு.100 முதல் கி.பி.150 வரை வாழ்ந்த 10வது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும்; கி.பி.785 முதல் கி.பி.1040 வரை வாழ்ந்த 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் முயற்சி செய்து கடவுள்களை வரவழைத்து அவர்கள் சொன்ன பதில்களைத்தான் இப்பொழுது நாம் சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

10வது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்தில் தோன்றிச் சொன்ன ஆதிசிவனாரின் கூற்றுப்படிதான் 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் தோன்றினார்கள்.

பின்பு நலிந்து, மெலிந்து, தேய்ந்து, ஓய்ந்து போன நிலையில்தான் 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி பிறம்மனை கூப்பிட்டு விளக்கம்

கேட்கிறார். இந்த பிறம்ம தேவன்தான் கடவுள் ஒருவரா என்பதற்கு விடை கூறுகிறார். ஆதிசிவனார் கூறிய இந்துவேதமும், பிறம்மன் கூறிய இந்துவேதமும் விளக்கம் தருகிறது. உண்மையான கருத்தினைத்தான் இந்து வேதம் கூறுகிறது.

எல்லா மதத்தினரும் எல்லா வேதத்தவரும் சிந்திக்க வேண்டும். இந்துக்கள் சிந்திக்க வேண்டும். தமிழகம்தான் இந்து வேதத்தின் நாற்றங்கால். உண்மையினைத் தெரிந்து கொள்ளுங்கள். உலகிற்கு எடுத்துச் சொல்லுங்கள்.

இந்து வேத விளக்கக் கூட்டங்கள் நடத்தப் படுகிறது என்றால், இதற்குக் காரணம் - தமிழன்தான், தமிழினம்தான் இந்து வேதத்தின் வித்துக்கள், இந்து வேதத்தின் நாயகர்கள், இந்து வேத மூலவர்கள், காவலர்கள், வாரிசுகள். தமிழர்களின் உள்ளங்கள், இல்லங்களின் உலகப் பொது வேதமான, உலக மூல வேதமான, உலக முதல் வேதமான கடவுளாலேயே எழுதப்பட்ட வேதம்தான் இந்து வேதம்.

தமிழர்களின் உள்ளங்கள்தான், இல்லங்கள்தான், தமிழ்நாடுதான் இந்து வேதத்தின் விதைப் பண்ணைகள், நாற்றங்கால்கள், நாற்றுப் பண்ணைகளாக இருக்கின்றன என்பதனை தெளிவாக எல்லா மக்களுக்கும் கூற வேண்டும்.

தமிழன் விழிச்சி பெற்று, செழுச்சி பெற்று, எழுச்சி பெற்று, முறையான பயிற்சி பெற்று, நிறைவான முயற்சிகள் செய்து உயர்ச்சி பெற்று விட்டால் இந்து வேதமும், இந்து மதமும் மறுமலர்ச்சி அடையும், ஆட்சிமீட்சி அடையும்.

இந்து வேத விளக்கக் கூட்டம் மற்ற மதத்தினை, வேதத்தினை எதிர்த்தோ, பகைத்தோ சொல்லக் கூடிய கூட்டமல்ல. இது இலக்கியக் கூட்டம்; உலக இலக்கியம், அருள் இலக்கியம். இதில் இல்லாதது ஒன்றுமே இல்லை.

பிண்டங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்கள், மண்ணுலகம்; வானம், விண், ஆகாயம், விசும்பு, ககனம், பால்வெளி, பரவெளி போன்ற ஏழு பகுப்பு அடுக்குகளாக இருக்கக் கூடிய அண்டபேரண்டங்களை விளக்குகிறது.

முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பு இவைகளை விளக்குகிறது இந்து வேதம்.

மக்களுக்கு உள்ள இன்பம், துன்பம், மெலிவு, நலிவு, இழிவு, அழிவு இவைகளை விளக்குகிறது இந்து வேதம். ஏன் நிம்மதி இல்லை? நிறைவு இல்லை? உனக்கு மட்டும் ஏன் வெற்றி? உனக்கு மட்டும் ஏன் தோல்வி? இதற்கு விளக்கம் தருகிறது இந்து வேதம்.

உனது உடல் ஏன் இப்படி இருக்கிறது? உனது உணர்வுகள், உனது எண்ணங்கள் ஏன் இப்படி இருக்கின்றன? என்பதற்கு விளக்கம் தருகிறது இந்து வேதம்.

இதற்கு என்ன செய்யலாம் என்பதற்கும், பரிகாரம் செய்து கொள்ளலாம் என்பதற்கும் விளக்கம் தருகிறது இந்து வேதம்.

உன் தலைவிதி இதுதான் என்று கூறவில்லை இந்துவேதம். அனைத்தையும் நலப் படுத்தலாம், சரி செய்து கொள்ளலாம் என்று கூறுகிறது இந்து வேதம். இப்படிப்பட்ட வேதம்தான் இந்து வேதம். கூட்ட முடிவில் ஞானாச்சாரியாரிடமும், அடியான்கள், அடியாள்கள், அடியார்களிடமும் ஆசி பெற்றுக் கொள்ளுங்கள். அருட்கணிப்பு செய்து கொள்ளுங்கள். முடிகயிறு, தாயத்து, அருளூறு பூசனைப் பொருட்கள், திருநீறு குங்குமம் சக்கரங்கள் உருத்திராக்கம் பெற்றுப் பயன் அடையுங்கள். தீட்சை பெற்று நலமோடு வாழுங்கள். இல்லாவிட்டால் வீட்டிற்கு அழைத்து யாகம், ஓகங்கள், வேள்விகள் செய்து கொள்ளுங்கள். குண்டலினி பயிற்சி பெறுங்கள். யோகாசன,

ஓகாசனப் பயிற்சி முறைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். அனைத்தையும் நலப்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த மேடையில் பேசக் கூடிய நாங்கள் இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குவலய குருபீடமான 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியால் கருகுலத்தில், குருகுலத்தில், திருகுலத்தில், தருகுலத்தில் ஆண்டுக் கணக்கில் இட்டும் தொட்டும் சுட்டியும் தயாரிக்கப் பெற்று அருளப் பெற்றவர்கள். கடவுள்களை உண்டாக்கக் கூடியவர்கள். நலிந்த, மெலிந்த, சோர்ந்து போன கடவுள்களைத் தட்டியெழுப்பி அவர்களுக்கு புத்துயிர்ப்பு செய்யக் கூடியவர்கள்.

மனிதர்களின் இன்னல்களை, இருளடைந்தவர்களை, அவர்களின் பாதிப்புக்களை நீக்கி சரி செய்யக் கூடியவர்கள். கடவுளாக ஆக்கப்பட்ட இந்த சன்னிதானங்கள், ஆதீனங்கள், பண்டாரங்கள், தம்பிரான்கள் என்ன சந்தேகம் இருந்தாலும் விளக்கக் கூடியவர்கள்.

இப்படிப் பட்டவர்களை எமது குருதேவர் தயாரித்துத்தான் இன்று மேடையில் பேச விட்டிருக்கிறார். இது அரசியல் மேடை அல்ல, இலக்கியக் கூட்டங்கள் என்பதினை மக்கள், குறிப்பாக தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரே கடவுளா? இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை; கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கிறார்கள் என்று விளக்குவதற்கு 100 ஆண்டுகள் போராடி விட்டு முடிவில் 10வது பதினெண்சித்தர் பீடாதிபதி அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் அவர்கள் ஆதிசிவனாரை அழைத்து விடை சொல்லப் போனார்.

இவரது காலத்தில்தான் இந்து வேதத்தை வீழ்ச்சி அடையச் செய்ய பிறமண்ணினரான பிருமணர்களுடைய வடஆரியர்கள், சோனகர், யவனர், சீனர், ... இவர்கள் ஒன்று சேர்ந்து இந்து

வேதத்தையும், இந்து மதத்தையும் குழப்பி விட்டனர். இதையெல்லாம் பார்த்த பிறகுதான் ஆதிசிவனுர் விளக்கம் அளித்தார்.

இதேபோலத்தான் பிற்காலச் சோழப் பேரரசின் தந்தை 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூருர் பிறம்மனை அழைத்து பலமுறை குமரி முதல் இமயம் வரை தம்மோடு நாடு முழுவதும் அழைத்துச் சென்று மதத்தின் பெயரால் நாடு சீர்குலைந்து கிடப்பதையும், அகத்திலும் புறத்திலும் இருள், இன்னல், போட்டி, பொருமை, மதத்தின் பெயரால் போட்டி, பொருமை, ... முதலியவற்றைப் போக்கிட இந்து வேதத்தினை விளக்கக் கூறுகிருர். ஆகவே பிறம்மனும் முக்கொம்புக் காட்டிலே அமர்ந்து இந்து வேதத்தைக் கூறுகிருர்.

இந்து வேதத்தோடு மோதுவதற்கு பயன்படுத்தக் கூடிய ஆயுதம் ஒரே கடவுள் என்பதுதான். இந்த ஆயுதம் தவருன ஆயுதம், பிழையான ஆயுதம் என்பதினை விளக்கிக் கூறி விட்டால் போதும்; இந்து வேதமும் இந்து மதமும் பிழைக்கும், தழைக்கும் என்று விளக்கம் கூறுகிருர்.

ஆகவே இங்கு ஆதிசிவனுர் கூறிய கருத்துக்களையும், பிறமனுல் சொல்லப்பட்ட கருத்துக்களையும்தான் மேடையில் கூறி வருகிறோம். எங்களது சொந்தக் கருத்து அல்ல. ஆகவே யாரும் வருத்தப்படத் தேவையில்லை.

நாட்டில் சீர்திருத்தவாதிகள், மறுப்பாளர்கள், வெறுப்பாளர்கள் என்று சொல்லக் கூடியவர்களும், நாத்திக வாதிகளும் இன்று இந்து மதத்தை, இந்து வேதத்தைத் தாக்கிப் பேசி வருகிருர்கள்.

அதே சமயத்தில் மாற்று மதத்தினரைப் பற்றிப் பேசுவதே இல்லை. மாருக அவர்களுக்குக் காவலர்களாக மாறி விட்டார்கள்.

ஆக இவர்களுக்கு விளக்கம் கூறுவதற்கு ஆட்கள் இல்லை. இவர்களை திருத்துவதற்கு ஆட்கள் இல்லை. பெரிய, பெரிய மடாதிபதிகளும், ஆதீனங்களும், தம்பிரான்களும், சன்னிதானங்களும் இருந்தும் வாய்மூடி மௌனியாகப் போய்விட்டார்கள்.

தமிழனுக்கு நல்ல தமிழனாக தலைவன் இல்லை. தமிழ்மொழியைக் காப்பதற்கு சரியான தமிழன் இல்லை.

ஆகவேதான் இந்து வேதமும், இந்து மதமும் வளர்ச்சி அடையவில்லை. மாறாக மாற்று மதத்தவர் இந்து வேதத்தை இழித்து, பழித்துக் கூற இவர்கள் உடந்தையாக இருக்கிறார்கள்.

ஒரே ஒரு கடவுள் என்றால் அவர் எங்கே இருக்கிறார்? வேறு யாரும் கடவுளாக இருக்கக் கூடாது என்று நினைக்கிறாரா? அவர் தன்னல வெறியனா? அப்படி ஒரே ஒரு கடவுள் அவர் ஆணா? பெண்ணா? அலியா? என்பதினை சொல்ல வேண்டும். அது மட்டுமல்ல, அந்தக் கடவுள் குட்டையா? நெட்டையா? குண்டாக இருக்கிறாரா? ஒல்லியாக இருக்கிறாரா? மூன்று வேளை சாப்பிடுவாரா? சாப்பிட மாட்டாரா? எங்கே இருந்து கொண்டு இந்த வேலைகளைச் செய்கிறார்?

ஒரே ஆளாக இருந்து கொண்டு எல்லா வேலைகளையும் செய்ய முடியுமா என்பதினை விளக்க வேண்டும்.

ஒரே ஒரு கடவுள் என்றால் உலகில் ஒரே மொழிதான் இருக்க வேண்டும், ஒரே ஒரு கடவுள் என்றால் அவருக்கு எல்லா மொழிகளும் தெரிந்திருக்க வேண்டும். தெரியுமா?

ஒரே ஒரு கடவுள் என்றால், எல்லா மக்களும் ஒரே மாதிரியான தோற்றத்தில்தானே இருக்க வேண்டும்? இருக்கிறார்களா?

எல்லா நாடுகளிலும், எல்லா இனத்தவர்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும், ஒரே மொழியைப் பேச வேண்டும்; பேசுகிருர்களா? ஒரே வகையான உணவை உண்ண வேண்டும்; ஒரே மாதிரியான உடையை உடுத்த வேண்டும். நடைபெறுகிறதா? ஆகவே இவைகளைப் புரியவைக்க வேண்டும்.

மேலும் ஒரே ஒரு கடவுள் என்பது உண்மையாளுல் பல கடவுள் இருப்பதாக மனிதன் கூறுவதைத் தடுத்திருக்க வேண்டும். இன்ஞெரு கோயிலைக் கட்டுவதற்கு அனுமதித்திருக்கக் கூடாது. எப்படி அனுமதித்தார்? இதைச் சிந்திக்க வேண்டும்.

108 திருப்பதிகளையும், 243 சத்தி பீடங்களையும், 1008 சிவாலயங்களையும் கட்ட எப்படி அனுமதித்தார்? இவைகளை எப்படிச் செய்கிருர்? யார் மூலம் செய்கிருர்? இவருக்கு எத்தனை கைகள்? எத்தனை கால்கள்? எத்தனை கண்கள் இருக்கின்றன?

மற்ற மதத்தவர்கள் தங்களின் கடவுள்கள் என்ன உடை உடுத்துகிருரோ, என்ன உணவு சாப்பிடுகிருரோ, அதைத்தான் செய்ய வேண்டும்; என்ன மொழி பேசுகிருரோ அந்த மொழியைத்தான் பேச வேண்டும் என்று கூறுகிருர்கள். இது எப்படி சாத்தியமாகும்?

இந்த நாட்டில் பல மதத்தினர் வந்திருக்கிருர்கள். பல மதங்கள் வந்திருக்கின்றன. அந்த மதத்தைச் சேர்ந்த கடவுள்கள் இந்நாட்டு மொழியை தெரிந்து கொள்ள முடியவில்லை. இந்நாட்டு உணவு, உடை முதலியவைகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்நாட்டு இசைக் கருவி இசையை, இந்நாட்டுத் திருவிழா முறைகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்ருல், இந்நாட்டு மக்களை எப்படி ஏற்றுக் கொள்ளும்?

இந்த நாட்டுப் பெண்கள் பொட்டு, பூ வைத்துக் கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை; திருநீறு குங்குமத்தை ஏற்றுக்

கொள்ள முடியவில்லை என்றால் ஒரே ஒரு கடவுள் என்பதினை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

ஒரே ஒரு கடவுள் என்றால் ஏன் இத்தனை நாடுகள் இருக்கின்றன? ஏன் இத்தனை இனங்கள்? ஏன் இத்தனை மொழிகள்? ஏன் இத்தனை வகை உணவு முறை? ஏன் இத்தனை வகை உடைகள்? ஏன் இத்தனை வகை திருவிழா, இசைகள், இசைக்கருவிகள்?

ஒரே ஒரு கடவுள் என்றால் இத்தனையையும் தடுத்திருக்க முடியாதா? இத்தனையையும் ஒரே கடவுள் செய்திருக்க முடியுமா? சரி அப்படி முடியும் என்றால், அத்தனையையும் ஏன் ஏற்றுக் கொள்ள முடியவில்லை?

இவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்த்தால் இந்துவேதம் கூறுவதுதான் உண்மை, உண்மை, உண்மை என்பது புரியும்.

எனவே, கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கிறார்கள், பிறக்கிறார்கள், இறக்கிறார்கள், பிறப்பார்கள், பிறப்பிறப்பற்ற நிலையினை அடைகிறார்கள், இதுதான் உண்மை, உண்மை, உண்மை.

இப்படி கோடிக்கணக்கான கடவுள்கள் இருப்பதால்தான் கோடிக்கணக்கான கோயில்கள், கோடிக்கணக்கான மொழிகள், இனங்கள், உணவு முறைகள், உடை வகைகள், இசைக் கருவிகள் இருக்கின்றன.

இந்து வேதம் கூறுகிறபடி கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கின்றன. எந்த மொழியையும் கற்றுக் கொண்டு அந்த மொழி மூலம் அந்தந்தக் கடவுள்களை வழிபடலாம், பலவிதமான உடைகள், பலவிதமான உணவு முறைகள், பலவித உணவுகளைப் படைத்தும் வழிபடலாம் என்று இந்து வேதம் கூறுகிறது.

ஆக மொழி விடுதலை, நாட்டு விடுதலை, இன விடுதலை பெற்று வாழலாம். ஆகவே, இவைகள் மூலம் கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கிறுர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஒரே கடவுள் என்பது பயனற்ற கருத்து. உண்மையில்லாத கருத்து, மோசடியான கருத்து. இந்து வேதத்தில் ஆயிரக்கணக்கான கோயில்களும், ஒவ்வொரு கோயிலிலும் நூற்றுக்கணக்கான கடவுள்களும் இருக்கிறுர்கள். ஒவ்வொரு கடவுளுக்கும் வரலாறு உண்டு. ஒவ்வொரு கடவுளுக்கும் தனித்தனி ஆற்றல்கள் உண்டு என்று இந்து வேதம் கூறுகிறது.

33,000 கோடி தேவர்கள், 96,000 கோடி கணங்கள், 36,000 கோடி முனிவர்கள், 48,000 கோடி இருடிகள், 1000 கோடி தேவதைகள் இருக்கிறுர்கள் என்று 5 வகையான பிரிவுகள் இருப்பதாக இந்து வேதம் கூறுகிறது. 48 வகை வழிபடுநிலையினர் இருக்கிறுர்கள். இவர்கள் வாழ்வதற்கு 48 வகைப் பட்ட கருவறைகள், 48 வகை வெட்டவெளிக் கருவறைகள், 48 வகை வழிபடு நிலையக் கருவறைகள் இருக்கின்றன, 48 வகைப்பட்ட மூலக் கருவறைகள் இருக்கின்றன. இதை யாரும் மறந்து விடக் கூடாது.

கடவுள்கள் விண்வெளியிலிருந்து வந்தாலோ அல்லது வந்து இருந்தாலோ அவர்களுக்கு **திருக்கள்** என்று பெயர்.

பயிரினங்களிலிருந்து உருவானவர்கள் **தருக்கள்** எனப்படுவர்.

உயிரினங்கள் அதாவது ஈ, எறும்பு, மனிதன், .... இறந்தால் அவர்களின் ஆவி, ஆன்மா, உயிர் மூலம், அவர்களின் சத்தியின் மூலம் கடவுள்கள் உண்டாகின்றனர். இவர்களுக்கு **கருக்கள்** என்று பெயர். மேலும் மனிதன் இறந்தாலோ, தற்கொலை செய்து கொண்டாலோ, சிதைந்து போனுலோ அவர்களின் ஆவி, ஆன்மா,

உயிரின் சத்தி பெற்று கடவுள்கள் ஆகி விடுகிறுர்கள். இவர்களுக்கு **<u>கருக்கள்</u>** என்று பெயர்.

48 வகைப்பட்ட அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், 48 வகைப்பட்ட மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள்;

8 வகைப்பட்ட மூல ஆச்சாரியார்கள், 48 வகைப்பட்ட ஈசுவராச்சாரியார்கள், 48 வகைப்பட்ட ஆதி ஈசுவர ஆச்சாரியார்கள், 48 வகைப்பட்ட சிவாச்சாரியார்கள், 48 வகை ஆதி சிவாச்சாரியார்கள், 48 வகை பரமாச்சாரியார்கள், 48 வகை ஆதி பரமாச்சாரியார்கள், 48 வகை சங்கராச்சாரியார்கள், 48 வகை ஆதிசங்கராச்சாரியார்கள் உள்ளனர்; (*சங்கராச்சாரியார்களில் 40 பேர் தோன்றியுள்ளனர். இன்னும் 8 பேர் தோன்ற வேண்டும். ஆதிசங்கராச்சாரியார்களில் 32 பேர் தோன்றியுள்ளனர். இன்னும் 16 பேர் தோன்ற வேண்டும்.*)

48 வகை சித்தர்களும், 48 வகை பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் காலப்போக்கில் தங்கள் ஆற்றலே, அருளே உலக மக்களுக்காக வங்கியில் பணம் சேர்த்து வைத்திருப்பது போல் கடவுளே உண்டாக்கி, அதில் அருளே தேக்கி வைக்கின்றனர்; சக்கர வடிவிலும் தேக்கி வைக்கிறுர்கள், உருவங்களே செய்து தேக்கி வைக்கிறுர்கள். பீடம் அமைத்து தேக்கி வைக்கிறுர்கள். அல்லது சமாதியில் தாங்களே கடவுளாகின்றனர்.

இப்படி உண்டாகின்ற கடவுள்கள், மனிதன் உருவாக்குகின்ற கடவுள்கள் **<u>குருக்கள்</u>** என்று கூறுகின்றனர்.

இவ்வாறு திருக்கள், தருக்கள், கருக்கள், குருக்கள் என்று நான்கு வகைப்பட்ட கடவுள்கள் இருக்கின்றனர். ஆகவே பலவகையான கடவுள்கள் இருப்பதாக இந்து வேதம் கூறுகிறது.

கடவுள்கள் பிறக்கின்ற முறையிலே, உருவாகின்ற முறையிலே, தோன்றுகின்ற முறையிலே, தோற்றுவிக்கும் முறையிலே 4 வகையான கடவுள்கள் இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள்.

எனவே கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கிறார்கள். கடவுள்களில் கோடிக்கணக்கான அருவங்கள், கோடிக்கணக்கான அருவ உருவங்கள், கோடிக்கணக்கான உருவங்கள், கோடிக் கணக்கான உருவ அருவங்கள் இருக்கிறார்கள்.

இந்த கடவுள் உருவம் எப்படி குட்டையா, நெட்டையா, கருப்பா, சிவப்பா, குண்டா, ஒல்லியா என்பதற்கு விளக்கம் கூறுகிறது இந்து வேதம். இந்தக் கடவுள்கள் இந்த வகை உடை உடுப்பார்கள், இன்னின்ன உணவு சாப்பிடுவார்கள், எந்தெந்த கடவுள்கள் கறி மீன் சாப்பிடுவார்கள், எந்தெந்த கடவுளுக்கு கறி மீன் பிடிக்காது என்று பகுத்துக் கூறுவது இந்துவேதம் ஒன்றுதான்.

இப்படிக் கடவுள்களை வகைப்படுத்தி அடுக்களைச் சாத்திறம், மட நூல்கள், பூசாவிதிகள் என்று எழுதி எந்தெந்த கடவுள்களை எப்படிக் கும்பிட வேண்டும் எனப் பட்டியல் போட்டுக் காட்டுவது இந்து வேதம்.

ஒவ்வொரு கோயில்களில் நடைபெறுகின்ற பூசை முறைகள் வேறு, பூசை விதிகள் வேறு, தத்துவங்கள் வேறு, சித்தாந்தங்கள் வேறு. இவைகளைப் படித்தாலே கடவுள்கள் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆகவே, இந்து வேதத்தில் தெளிவாக ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு எழுத்திலும், ஒவ்வொரு வாக்கியத்திலும், ஒவ்வொரு சொற்றொடரிலும், ஒவ்வொரு வாசகத்திலும் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லப்படுகிறது.

ஆக ஒரே கடவுள் என்றால், அவர் எப்பொழுது வருவார்? அவர் ஏன் அடிக்கடி மனிதர்களைச் சந்திக்கக் கூடாது? ஏன் அடிக்கடி மக்களுக்கு அருள் வழங்கக் கூடாது? என்று கேட்பதுதான் இந்து வேதம். இந்து வேதம் கேட்பது மூலம்தான் இந்து வேதத்தின் அருமை பெருமைகள், அரிய பயன்கள் இந்து மக்களுக்கு புரியும். இந்து வேதத்தின் வாரிசுகளுக்குப் புரியும். இந்து வேத மூலவர்களுக்குப் புரியும். இந்து வேத காவலர்களுக்குப் புரியும், இந்து வேத நாயகர்களுக்குப் புரியும். தமிழர்களுக்குப் புரியும், புரியும், புரியும்.

தமிழர்கள் ஒன்றுபட்டால்தான் தமிழர்கள் இல்லங்கள் தோறும், உள்ளங்கள் தோறும் விதைப் பண்ணைகளாக, நாற்றுப் பண்ணைகளாக, நாற்றங்கால்களாக மாறும், மாறும், மாறும்.

எனவே இந்து வேதத்திற்கு நல்ல விதைகள் தேவை, நல்ல நாற்றுக்கள் தேவை, நல்ல வாரிசுகள் தேவை, நல்ல நாயகங்கள் தேவை, நல்ல மூலவர்கள் காவலர்கள் தேவை.

இந்து வேத வளர்ச்சிக்காக, தமிழா! நீ எழுச்சி பெறு! தமிழா! நீ செழுச்சி பெறு! தமிழா! விழிச்சி பெறு! தமிழா! பயிற்சி பெறு! அப்பொழுதுதான் இந்து வேதம் வளர்ச்சி பெறும், ஆட்சி மீட்சி பெறும், நன்மை கிடைக்கும், உண்மை கிடைக்கும், திண்மை கிடைக்கும். ஆகவேதான், இந்து வேதம் கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள் என்று கூறுகிறது.

கருகுலம், குருகுலம், திருகுலம், தருகுலம் என்று இந்து வேதத்திற்காக இந்து மதத்திற்காக பயிற்சிப் பள்ளிகள் உண்டாக்கப் பட்டு இந்து வேதங்கள் ஓதப்பட்டு, பயிற்சி வழங்கப் பட்டு வருகிறது.

காரஞ்ஞேடையில் பதினெண்சித்தர் மடம் கருகுலம் உண்டாக்கப் பட்டு இன்றைய குருமகாசன்னிதானம், குவலய குருபீடம், ஞானுச்சாரியார், இந்தக் கருகுலத்தில் சன்னிதானங்களே, பீடங்களே, தம்பிரான்களே, ஆதீனங்களே, பண்டாரம் போன்றவர்களே உருவாக்கி இன்று இவ்வகையான விளக்கக் கூட்டங்களே கூட்டிப் பேச விட்டிருக்கிருர்கள்.

ஆகவே உண்மையை உணர்ந்து இந்து வேத விளக்கக் கூட்டம் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு தெருவிலும் நடத்துவதற்கு தமிழ் ஆர்வம் உள்ள தமிழர்கள், இந்து வேதத்தின்பால் பற்றுக் கொண்ட தமிழர்கள், இனப் பற்று உள்ளவர்கள் இவ்வகையான கூட்டங்களே கூட்ட முன்வர வேண்டும்.

தமிழர்களின் குடும்ப வாழ்வு, தனிமனித வாழ்வு, தமிழ்ச் சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு மலர்ச்சி பெற வேண்டும், வளர்ச்சி பெற வேண்டும், எழுச்சி பெற வேண்டும், செழுச்சி பெற வேண்டும் என்ருல் எல்லோரும் பதினெண்சித்தர் மடத்துடன் தொடர்பு கொண்டு பயன் அடையுங்கள். மடத்தை நோக்கி வாருங்கள், வாருங்கள், வாருங்கள்.

**//உண்மை நகல்//**

**// இதன் மூலநகல்: சித்தரடியார் திரு இராமானுசதாசு அவர்களின் கையெழுத்திலும் இடையில் வேறு ஒருவருடைய கையெழுத்திலுமாக இருந்தது. இந்த நகலின் மொழி நடை பேச்சு வழக்கிற்குரியதாகவே இருந்தது. //**

# <u>இந்து மதம்</u> <u>(சித்தர் நெறி)</u>

## THE INDHUISM (The SIDDHARISM)

கடலுள் மறைந்த 'குமரிக் கண்டம்' என்கின்ற இளமுறியாக் கண்டத்தில் (1984ஆம் ஆண்டுக் கணக்கின்படி) 43,73,085 ஆண்டுகளுக்கு முன்னால் விண்வெளியிலிருந்து இம்மண்ணுலகுக்கு வந்த பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட மதமே இந்துமதம்.

'இந்து' என்ற சொல்லுக்கு அனாதிக்காலத்தில் நாற்பத்தெட்டு வகைப் பொருள்கள் கூறப்பட்டன. கடந்த நான்கு யுகங்களில் இச் சொல்லின் பொருள் வளம் மிகுந்து 1359 சொற்களால் இதன் பொருள் விளக்கப் படுகின்றன.

இம் மண்ணுலகைச் சேர்த்து விண்வெளியில் 108 திருப்பதி அண்டங்கள் [ஆண் தன்மையும், பெண் தன்மையும் சம பங்கு உள்ளவை]; 243 சத்தி அண்டங்கள் [பெண் தன்மை உடையவை]; 1008 சிவாலய அண்டங்கள் [ஆண் தன்மை உடையவை]; உள்ளன. விண்ணில் கோடிக் கணக்கான மீன்களும் [Stars], கோள்களும் [Planets], இராசி நிலைகளும் இருந்த போதிலும் இருபத்தேழு (27) மீன்களும், ஒன்பது கோள்களும் (9), பன்னிரண்டு இராசிகளும் (12) மட்டுமே இம்மண்ணுலக ஈர்ப்புக்குட்பட்டு உரிய விளைவுகளை உண்டாக்குகின்றன. எனவே, விண்ணிலுள்ளவை[Celestial Things]தான் இம்மண்ணுலக பயிரின உயிரினத் தோற்ற மாற்ற ஏற்ற வளர்ச்சி இயக்கங்களை நிர்ணயிக்கின்றன.

‘கடவுள்’ என்ற பொதுச் சொல்லால் குறிக்கப்படும் வழிபடும் நிலையினர் 48, வழிபடு நிலையங்களின் வடிவும் வாழ்வும் 48, அருட்கலைகள் 48 வகை, அருளாளர்கள் [Divinators] 48 வகை ... என்று பல நிலைகளில் [Different Stages and Positions of Divinity and Power] நுட்பமாக பாகுபாடுகள் செய்யப்பட்டுள்ளன இந்துமதத்தில்.

மனிதனுக்குக் கணக்கற்ற பிறவிகள் உண்டு. குருவருளால் குறைந்தது ஏழு முற்பிறவிகளையும், ஏழு மறுபிறவிகளையும் தெரிந்து கொள்ளலாம். ஊழ்வினை, வினை (விதி), ஆள்வினை (உலகியல்) என்ற மூன்றுமே மனித வாழ்வை நிர்ணயிக்கின்றன. (பசு) உயிர், (பதி) கடவுள், பாசம் (தளை) எனும் மூன்றுமே அருளுலகை நிர்ணயிக்கின்றன. மனிதன் என்பது ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றின் கூட்டுப் பொருளே. மனிதன் பயிற்சியாலும், முயற்சியாலும் கடவுளாகலாம்.

இன்றுள்ள கடவுள்கள் அனைவரும் வாழ்ந்த மக்களே. வழிபாட்டு நிலையங்கள் அனைத்தும் சமாதுகளே (கல்லறைகளே). அத்தா, அல்லா, அப்பன், ஆண்டவர், இறைவர், ஈசர், கடவுள், தெய்வம், பட்டவர், தேவியர், தேவதை, தேவர், இருடி, முனிவர், அமரர், கணபாடி, ... என்று 48 வகை வழிபடு நிலையினர் [கடவுள்கள்] உண்டு.

- ♦ ஆணும் பெண்ணும் சமமே.
- ♦ பெண்ணே அண்டபேரண்ட சத்திகளைத் தன்னுள் பெற்று வழங்க வல்லவள்.
- ♦ பெண்ணே அருளுலகின் கண்.
- ♦ பெண் மாதம் தோறும் மலரும் மலர்.

♦ பெண்ணை விதவை என்றோ, தீட்டு என்றோ, பூசையின் போது தொடத் தகாதவள் என்றோ கருதுவது மடமை.
♦ நெருப்பை வளர்த்து வழிபாடு செய்வதே விரைவில் பயன் தரும்.
♦ குருவே அனைத்துக்கும் கரு, உரு என உணர்ந்திடுக.
♦ குருவும் திருவும் ஒன்றென உணர்ந்திடுக.
♦ எதையும் கடவுளாக மாற்றலாம்.
♦ இல்லற இன்ப வாழ்வே சிறந்த இறை வாழ்வு.
♦ மனித உறவுகளையும், உரிமைகளையும் காத்தலே பூசை.
♦ பற்றோடும், பாசத்தோடும், கனிவோடும், அன்போடும் ஒற்றுமையாக வாழலே மத வாழ்வு.
♦ பிறரை அடிமைப்படுத்தாதே, பிறரிடம் அடிமையாகாதே என்பதே இந்துமதம்.
♦ சமத்துவமும், சகோதரத் தத்துவமும், பொதுவுடமையுமே இந்துமத முக்கோண பீடம்.
♦ தனக்குள் இறைவனைக் காண்பவனே இந்து.
♦ சிந்தை நிறைவையும், நெஞ்ச அமைதியையும் வழங்குவதே இந்துமதம்.
♦ அகம்பாவம், ஆணவம், கன்மம், பேராசை, ஏக்கம், ஏமாற்றம் அகற்றி வாழச் செய்வதே இந்துமதம்.

உலக மதங்களனைத்துக்கும் மூலமாகவும், முதலாகவும், தாயாகவும் இருக்கின்ற பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதம் பற்றி மேலும் தெரிய, அருளை அநுபவப் பொருளாகப் பெற்றிடத் தொடர்பு கொள்க.

(1) தலைமைப் பொறுப்பாளர், இந்து மறுமலர்ச்சி இயக்கம், பிறமாச்சாரியார்.

(2) தலைமைச் செயலாளர், அருட்பணி விரிவாக்கத் திட்டம், பரமாச்சாரியார்.

(3) HEAD QUARTERS, தலைமை அலுவலகம், ஞாலகுரு சித்தர் கருவூரர்.

**<u>நகல் எடுத்தவர்</u>**:

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம், தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர் ஆதீனம், தேவி ஆலவாய்மூதூர் மீனாட்சி தம்பிரான், அருள்மிகு பாட்டி சோழியாயி திருவடி, தாத்தா பஃறுளியாற்றங்கரைக் கருவூரர் அருளாடு நாயகம், அனாதிசங்கராச்சாரியார் கணபாடிகள், பெரியவாள், காமகோடி, தேவாச்சாரியார், தேவி ஆலவாய் மூதூர் தத்தனேரி சுடலைபத்திற காளி சன்னிதானம், ஞானக்காட்சிச் செல்வன், ஞானக்காட்சி வழங்கு நாயகம், அருட்சேனைத் தளபதி, சித்தரடியான் M.C.இராமன் 248-K இரயில்வே காலனி, மதுரை-625010.

7.8.85 பகல் 1.00 மணி.

ஓம் திருச்சிற்றம்பலம்.

**//உண்மை நகல்//**

**// இதன் மூலம்: சித்தரடியான் திரு ம.சி. இராமன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

# நீத்தார் சடங்கு நிறைவுத் திருவிழா

**(பதினெண்சித்தர் நெறிமுறை)**

"ஆவி, ஆன்மா, ஆருயிர் தனித்தனியாகப் பிறப்பெடுத்தலே புவியாரால் இறப்பெனக் கவலைதரு நிகழ்வாயிற்று."

**- கருவாக்கு.**

"இறத்தலும் பிறத்தலும், உறங்கலும் விழித்தலும் ஒக்கும் நிகழ்வே! இரங்கலோ கிறங்கலோ தவிர்த்து வருவாழ்வுக்கு உரியன செய்க!"

**- குருவாக்கு.**

"பித்துலகீர்! பிண்டப் பிறப்புத் தடுக்கும் நசையீரே! கருவறிந்து, குருவறிந்து, தருவறிந்து, திருவறிந்து மருள்வழியில் அருளூற்றுல்; இருளகன்று, பிறப்பிறப்பற்ற பேரின்பப் பெருவாழ்வினைத் துய்க்கலாம்."

**- தருவாக்கு.**

"செத்தாரை மறவாது கருவாதி கருமாதி இருவாதித் திதி ஆற்றியே பெத்தாரை பிறப்போரை மூவாதியுணர்ந்த முத்தராக்கலாம்."

**- திருவாக்கு.**

***//குருதேவர் எழுதி*** 'நீத்தார் சடங்கு நிறைவுத் திருவிழா (பதினெண்சித்தர் நெறிமுறை)' ***என்ற தலைப்பில் 1988இல் அச்சிட்டு வழங்கிய அறிவிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட நால்வகை வாக்குகள்.//***

# மொழி மக்களின் விழி

"..... மொழிதான் ஒரு வட்டார மக்களின் அல்லது ஓர் இன மக்களின் உயிர்நாடி. அதுதான் அகப் பண்பாட்டையும், புற நாகரீகத்தையும் கருவாகக் கொண்டு உருவாக வளர்த்துக் காத்துத் தருவது. "மொழி மக்களின் விழி" என்ற பேருண்மையினை உணராத இனத்தினர்; தங்களது தாய்மொழியைப் பிற மொழியினருக்கு அடிமைப் படுத்துபவர்களாக, காட்டிக் கொடுப்பவர்களாக மாறி இறுதியில் அதன் அழிவுக்கும் காரணமாவார்கள்.

■ "ஓர் இனத்தின் வரலாறே அதனுடைய தாய்மொழியில்தான் அடங்கியிருக்கிறது";

■ "ஓர் இனத்தின் வாழ்வும் அழிவும் அதனுடைய தாய்மொழியின் வளர்ச்சியிலும், மலர்ச்சியிலும், செழுச்சியிலும்தான் அடங்கியிருக்கிறது";

எனவேதான், நாம் பிறமொழியை அடிமைப் படுத்தவோ, நலிவு படுத்தவோ, இழிவு படுத்தவோ முற்படவில்லை. எல்லா மொழிகளும் சமய மொழிகளாகப் (Religious Language) பயன்படல் வேண்டுமென்ற பொதுமைக் கருத்தே நமது புரட்சிக் கருத்து. ....."

**// 'அருளுலக அறிமுக அறிவுரை அஞ்சல்' என்ற தலைப்பில் 29-11-1980இல் குருதேவர் எழுதிய கட்டுரை அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்ட சிறு பகுதி. //**



“... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ வெற்றி பெறுமாறு செய்தார். ... ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org